
# திராவிடத்தால் வாழ்கிறோம்

825

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

9

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

## ‘பெரியார் எழுதிய முன்னுரை!’




தமிழ்நாடு சட்டமன்றத்தில் 17.04.2025 அன்று தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது பேசிய அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கவிக்கோ அப்துல் ரகுமான் பிறந்த நாளான நவம்பர் 9-ஆம் தேதியினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில், மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அறிவித்தார்.

தமிழ் இலக்கியத்துக்கு அவர் செய்த பெரும் பங்களிப்புகளுக்காக, நம் திராவிட மாடல் அரசு அந்த மரியாதையை அவருக்கு அளித்துள்ளது. அரபு - தமிழ் வழியாகத் தொடங்கிய இஸ்லாமிய இலக்கியம், இன்று தமிழிலக்கியத்தில் தவிர்க்க முடியாத அடையாளமாக மாறி இருக்கிறது. கவிக்கோவும் கலைஞரும் இலக்கிய நண்பர்கள் என்பதைத் தாண்டி, தமிழ் - இஸ்லாமிய இலக்கிய உறவின் அங்கமாக இருந்தனர் என்பதுதான் வரலாறு.

தென்னிந்தியாவில் திராவிட சமூக-அரசியல் இயக்கமாக வடிவம் பெறத் தொடங்கிய இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அதில் இஸ்லாமியர்களும் முக்கிய அங்கத்தினராக இருந்தார்கள் என்பதைப் பார்த்தோம். அதைப்போலவே தமிழ், தமிழிலக்கிய வளர்ச்சியிலும் இஸ்லாமியர்களின் பங்கு மகத்தானது.

எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை தமிழை அரபு எழுத்துக்களில் எழுதுவதுதான் வழக்கத்தில் இருந்தது. அரபு - தமிழ் முஸ்லிம்களின் மொழியாக இருந்தது. இருபதாம் நூற்றாண்டில் உருவான திராவிடச் சிந்தனையை ஏற்றுக்கொள்ளத் தொடங்கிய பின்புதான் அந்தப் போக்கு வழக்கொழியத் தொடங்கியது.

குறிப்பாக, தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு, பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட பல்வேறு சமூகக் குழுக்களை திராவிட / தமிழ் அடையாளத்தின் கீழ் ஒருங்கிணைத்தது, திராவிட சிந்தனைப் போக்குதான். முஸ்லிம்களைத் தமிழர்களாக அங்கீகரித்ததுடன், இஸ்லாத்தை ஒரு மதமாக மட்டுமல்லாமல், இந்து ஆரிய உயர்சாதி அடக்குமுறையிலிருந்து தப்பிக்க, தமிழர்களின் புகலிடமாகவும் கருதியது சுயமரியாதை இயக்கம்.

### தமிழ் முஸ்லிம் – சுயமரியாதை இயக்கம்

தமிழ்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் அரேபியர்கள் அல்ல, மாறாக மதத் துன்புறுத்தலைத் தவிர்க்க, இஸ்லாத்திற்கு மாறிய திராவிடர்கள் என்று அழுத்தமாக வாதிட்டார் பெரியார். இது இஸ்லாமியர்களிடத்தில் தாங்களும் தமிழர்களே என்ற உணர்வு மேலோங்கக் காரணமாய் அமைந்தது.

இன்றளவிலும் இலங்கை முஸ்லிம்களிடையே அரபு-தமிழ் இன்னும் உயிர்ப்புடன் இருக்கும் மொழி வடிவமாக உள்ளது. இது பண்டைய தமிழ்நாட்டிற்கு வந்த அரேபியர்களுடனும், முதல் தமிழ் முஸ்லிம்களிடம் இருந்தும் தோன்றியது. அவர்கள் தமிழை மட்டுமே பேச முடிந்தவர்களாக இருந்தனர். ஆனால், மொழியை அரபு எழுத்துக்களில் எழுதினர். இங்கிருந்த முஸ்லிம்களின் தாய்மொழியாகத் தமிழ் இருந்தாலும், அரபு மொழி அதன் புனிதத்தன்மையோடு பார்க்கப்பட்டது. அதேநேரத்தில் அரபியில் எழுதப்பட்ட குர்ஆன் இங்குள்ள முஸ்லிம்களால் முழுமையாக உணர முடியாத அளவுக்கும் இருந்தது. இப்படியான அரபு - தமிழ் கலாச்சாரம், இருபதாம் நூற்றாண்டில் கிட்டத்தட்ட முழுமையாக மறைந்தது. அதன் பின்னர்தான், தமிழ் முஸ்லிம் அடையாளம் மேலோங்கத் தொடங்கியது.

தமிழ் முஸ்லிம்கள், திராவிட இயக்கத்துடன் இணைந்து, தமிழ் மொழியை சமஸ்கிருதம், இந்தி, ஆதிக்கத்திலிருந்து மீட்கும் போராட்டத்தில் பங்கேற்றனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களும், முஸ்லிம் சமூக சீர்திருத்தவாதிகளும் அரபு-தமிழுக்கு எதிராக நின்றனர். அரபு-தமிழ் மீதான விமர்சனத்தின் விளைவாக, அரபு மதரஸாக்கள் கூட அரபு-தமிழ் மொழியை விலக்கத் தொடங்கின. இஸ்லாம் மார்க்கம் வேகமாகத் தமிழ்ப்படுத்தப்பட்டது.

### தமிழ் – இஸ்லாமிய இலக்கியத் தோற்றம்

‘புதினா லங்காரி (1876)’, ‘முஸ்லிம் நேசன் (1883)’, ‘அசன்பே சரித்திரம் (1885)’ போன்ற அரபு-தமிழ் பத்திரிகைகள் முஸ்லிம்களிடையே வாசிக்கப்பட்டு வந்த நிலையில், ‘தாவூத் ஷா’ போன்ற சீர்திருத்தவாதிகள் அரபு-தமிழை விமர்சித்து, தமிழை முன்னிறுத்தினர்.

1943-ஆம் ஆண்டில் அப்துல் ஹமீது பாகவி குர்-ஆனை முழுமையாகத் தமிழில் மொழிபெயர்த்தார். 1949-இல் குர்ஆனின் முதல் முழுமையான தமிழ் மொழிபெயர்ப்பு வெளியானது. இது இஸ்லாமிய மதத்தைத் தமிழில் அணுகுவதற்கு வழிவகுத்தது. தமிழ் முஸ்லிம்களின் நவீன அடையாளத்தை வலுப்படுத்திய முக்கிய நிகழ்வாகவும் அமைந்தது. அதன் தொடர்ச்சியாக நவீனத் தமிழ் உரைநடையை வளர்ப்பதிலும், தமிழ் முஸ்லிம்கள் பங்களிப்பு செய்யத் தொடங்கினர். தமிழ் முஸ்லிம்கள், ‘இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி’ என்ற முழக்கத்தின் மூலம், மதத்தையும் மொழியையும் இணைத்து ஒரு தனித்துவமான அடையாளத்தை உருவாக்கினர்.

> சமூக நீதி அரசியலும் - தாய் மொழி வழியிலான மார்க்கமும் தமிழ்நாட்டு முஸ்லிம்களிடத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன.

அரபு- தமிழிலிருந்து முழுமையாக தமிழுக்கு மாறிய பத்திரிகைகள் இஸ்லாமைப் பரப்புவதற்கும், முஸ்லிம்களின் அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வை உயர்த்துவதற்கும் உதவின. ‘அல்-இஸ்லாம்’, ‘அல்-கலாம்’, ‘சுதந்திர நாடு’, ‘வந்தே மாதரம்’, ‘பாக்கிஸ்தான்’ போன்ற பத்திரிகைகள் காலனியாதிக்கம், தேசியவாதம், பிரிவினை போன்ற முக்கியப் பிரச்சினைகளைப் பேசின. ‘முதலாம் உலகப் போர்’ மற்றும் ‘கிலாபத் இயக்கம்’ ஆகியவை தமிழ் முஸ்லிம் பத்திரிகைகளின் வளர்ச்சிக்குத் துணைநின்றன. ‘சமரசம்’ மற்றும் ‘பால்யன்’ இதழ்கள் இஸ்லாமையும், இஸ்லாமியக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி குறித்த சிந்தனைகளையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டன.

### அப்துல் ஹமீது பாகவி கொண்ட நெருக்கம்

அப்துல் ஹமீது பாகவியின் மற்றொரு நூல் ‘இயற்கை மதம்’. இந்நூல் இஸ்லாமின் ஆன்மிக நம்பிக்கைகளை விளக்குவதுடன், இஸ்லாம் போதிக்கும் அரசியல், பொருளாதாரம், வாழ்வியல் போன்றவற்றை விமர்சிப்பவர்களுக்கும் தக்க பதிலளித்தது. பிற சமூகங்களில் வழக்கத்திலுள்ள தீண்டாமை, பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் ஆகியவற்றைக் கடுமையாகச் சாடும் இந்நூல், இத்தகைய சமூகக் கொடுமைகளுக்கு இஸ்லாம் எப்படித் தீர்வளிக்கிறது என்பதைப் பற்றியும் பேசியது. அன்றைக்குப் புரட்சிகரமாகப் பார்க்கப்பட்ட இந்த நூலுக்கு, 26.10.1930 நாளிட்ட **‘குடி அரசு’** இதழில் மதிப்புரை எழுதினார் பெரியார்.

“ ‘இயற்கை மதம்’ என்னும் அதன் பெயருக்கேற்ப, இஸ்லாமிய மதக்கொள்கைகள் இயற்கைத்தன்மைக்கு முற்றிலும் பொருந்தியவை, இஸ்லாமிய மதச்சட்டங்கள் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தமானவை, அனுபவ சாத்தியமானவை, எந்நாட்டிலும் உள்ளவர்கள் எளிதில் அனுசரிக்கக் கூடியவை. இந்து மக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என்ற சமய வித்தியாசமின்றி அனைவரும் வாங்கி வாசித்துப் பார்க்க வேண்டியதொரு நூலாகும்” என்று பெரியார் எழுதினார். மதிப்புரை மட்டுமல்ல; அந்த நூலுக்கு முன்னுரையும் எழுதினார் பெரியார். பெரியார் அப்படி வேறு எந்த மத நூலுக்கும் முன்னுரை எழுதியவரல்ல என்பதை இங்கு பொருத்திப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் முஸ்லிம்களிடம் ஏற்பட்ட எழுச்சி, தமிழ் முஸ்லிம்கள் சென்ற நாடுகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியது. மலேசியா, சிங்கப்பூர், ரங்கூன் போன்ற இடங்களில் தமிழ் முஸ்லிம்கள் ‘சைபுல் இஸ்லாம்’, ‘மலேயா நண்பன்’, ‘தமிழ் முரசு’ போன்ற பத்திரிகைகளை வெளியிட்டனர். இவை தமிழ் இஸ்லாமிய அடையாளத்தை மேலும் வலுப்படுத்தின. இதுபோல இஸ்லாமிய அறிஞர்கள், தலைவர்கள், அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் பலவும் தமிழில் எழுதப்பட்டன. இவை அனைத்தும் தமிழ் பக்தி இலக்கியங்களின் பாணியில் இருந்தன. இவையெல்லாம் தமிழ் மக்களிடத்தில் இஸ்லாம் மார்க்கத்தை அறிந்து கொள்வதற்குப் பயன்பட்டன.

இப்படியான இலக்கியப் பங்களிப்புகளால், தமிழ்நாட்டில் வலுவான அடித்தளத்தையும், அரபு மதம் என்ற அந்நியப்படுத்தப்பட்ட மனநிலையில் இருந்து, இஸ்லாமியர்களை விடுவிப்பதற்கும் மொழி வழியான முயற்சிகள் முன்நின்றன. சமூக நீதி அரசியலும் - தாய் மொழி வழியிலான மார்க்கமும் தமிழ்நாட்டு முஸ்லிம்களிடத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன.

...நீளும்

## ஆதிக்குடிகளின் மீதான இழிவு அகற்றம்!

“இந்த மண்ணின் ஆதிக்குடிகளை இழிவுபடுத்தும் அடையாளமாக, ‘காலனி’ என்ற சொல் பதிவாகி இருக்கிறது. ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமையின் குறியீடுச் சொல்லாகவும் மாறி இருப்பதால், ‘காலனி’ என்ற சொல் அரசு ஆவணங்களில் இருந்தும், பொதுப்புழக்கத்தில் இருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

முதலமைச்சரின் இந்த அறிவிப்பு சமூக நீதிச் சிந்தனையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள எழுத்தாளர் அதி அசுரன், “தருமபுரி மாவட்டம், அரூர் அருகே கௌாப்பாறை என்ற ஊரில் ‘திராவிடர் தளம்’ அமைப்பினர் சில ஆண்டுகளுக்கு முன்பே, அங்கிருக்கும் காலனியின் பெயரை ‘பெரியார் நகர்’ என மாற்றி பெயர்ப்பலகையே வைத்துள்ளனர். அரசுப் பதிவுகளிலும் மாற்றியுள்ளனர்.


திருச்சியில் சின்னச்சாமி ‘உடையார்’ கார்டன் என்று ஒரு கேட்டட் கம்யூனிட்டி (Gated Community) இருந்தது. அதன் உரிமையாளரிடம் வேண்டுகோள் வைக்கப்பட்டது. இப்போது அப்பகுதி அதன் அருகிலுள்ள பகுதியான ‘முத்து நகர்’ என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. பெரியாரியத் தோழர்கள் வசிக்கும் பகுதிகளில் இதுபோன்ற சாதிப் பெயரிலான ஊர்ப் பெயர்களில் எண்ணற்ற மாற்றங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இன்று அரசே அந்த முயற்சியைத் தொடங்கி இருப்பதை வரவேற்கிறோம்” எனப் பாராட்டியுள்ளார்.

ஏற்கெனவே, நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரத்தில், அரசுப் பள்ளியின் பெயருடன் ‘அரிசன காலனி’ என்று இணைத்துச் சொல்லப்பட்டது திராவிட மாடல் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, அந்தப் பள்ளியின் பெயர் ‘ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மல்லசமுத்திரம் கிழக்கு’ என மாற்றப்பட்டது, குறிப்பிடத்தக்கது.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரைச் சந்தித்த தருணம்!



இல.குட்டியப்பன்

2015-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்து, கழக வளர்ச்சி நிதி வழங்கி வாழ்த்துப் பெற்ற தருணத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

– இல.குட்டியப்பன், வாசுதேவநல்லூர், தென்காசி வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தேர்தலுக்கு ஆயத்தமான அண்ணா!

1956-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் தேதி சென்னை, கோகலே மண்டபத்தில் ‘மாணவர் நிதி அளிப்பு விழா’ நிகழ்ச்சி நடைபெற்றது. இரண்டாவது மாநில மாநாட்டில் தி.மு.க. தேர்தலில் போட்டியிடுவது என முடிவு செய்யப்பட்ட நிலையில், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய பேரறிஞர் அண்ணா, ‘கழகத்திற்கு நிதி எப்படித் திரட்ட வேண்டும்? பிரச்சாரம் எப்படி இருக்க வேண்டும்? தி.மு.கழகத்தின் சின்னம் என்னவாக இருக்க வேண்டும்’ என்றெல்லாம் விரிவாகப் பேசினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131